மழைநீர் சேமிப்போம்"" பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் ""

நகராட்சி அலுவலகம்,
தேனி - அல்லிநகரம் ,
நாள் : 13.01.2025

**நகர்மன்ற சாதாரண கூட்டம் ( மேஜைப்பொருள் )**

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு, சோபகிருது வருடம், மார்கழித்திங்கள் மாதம் 29-ம் நாள் 13.01.2025-ம் தேதி திங்கள் கிழமை காலை 11.30 மணிக்கு நகர்மன்ற கூட்டரங்கில் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடைபெறும். அதில் மேஜை பொருட்கள் சேர்க்கப்பட உள்ளது. அது சமயம் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(ஒம்)பா.ரேணுப்பிரியா,
நகர்மன்ற தலைவர்,
தேனி - அல்லிநகரம் நகராட்சி.

**பொருள் 01:-**

தேனி – அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட இராஜவாய்க்காலில் ரூ.7.70/- இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரும் பணிக்கு உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று நிறுவனங்களிடம் இருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர்பணியின் விபரம் | விலைப்புள்ளிகோரிய தொகை ( GST வரி நீங்கலாக ) | | |
|---|---|---|---|---|
| | | கிட்டாச்சி 150 (1 மணிக்கு ) | கிட்டாச்சி 70 ( 1 மணிக்கு ) | டிராக்டர் & டெய்லர் ( நாள் ஒன்றுக்கு ) |
| 1 | M/s மாலா எர்த் மூவர்ஸ், தேனி | 2000 | 1450 | 5500 |
| 2 | M/s யுனைடெட் இன்ஜினியர்ஸ் அசோசியேட்ஸ், தேனி | 2200 | 1600 | 6050 |
| 3 | M/s ஜெயம் எர்த் மூவர்ஸ், தேனி | 2150 | 1550 | 6000 |

மேற்காணும் பணியினை மேற்கொள்ளுவதற்கு வரப்பெற்ற 3விலைப்புள்ளிகளில் குறைந்த பட்ச விலைப்புள்ளி கோரிய M/s மாலா எர்த் மூவர்ஸ், தேனி என்ற நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கிய விபரம் மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அ ) பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி பெற்று குறைந்த பட்ச விலைப்புள்ளி கோரிய M/s மாலா எர்த் மூவர்ஸ், தேனி என்ற நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண் : 3752 / 2024 / இ1**

**தீர்மான எண்**: 993
**தீர்மானம்**: அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் 02</u>:-

**தேனி – அல்லிநகரம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள கழிப்பறைகளில் பொருத்தப்பட்டுள்ள தண்ணீர் விநியோக உதிரி பாகங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை மாற்றி அமைப்பதற்கான பணியினை மேற்கொள்ளுவதற்கும் உத்தேச செலவினத் தொகை ரூ.**48000/- **ஆகும். மேற்படி பணிக்கான செலவினத்தை பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். **ந.எண்.க.90 202/5 / இ1**

**தீர்மான எண்**: 994

**தீர்மானம்**: அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் 03</u>:-

**தேனி – அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பொதுப்பணித்துறைக்கு சொந்தமான மீறுசமுத்திரம் குளத்தில் பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த இடமாக மாற்றி அமைக்கும் வகையில் பணியினை உங்கள் தொகுதி முதலமைச்சர் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளுவதற்கு ரூ.**7.00 **கோடி மதிப்பீட்டில் பிரேரணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் தேனி அவர்களின் வழியாக அரசுக்கு சமப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்காணும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கையினை கலந்தாலோசகர்** (Consultant) **மூலமாக பணியினை மேற்கொள்ளுவதற்கும், அப்பணிக்கான செலவினத்தை பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். **ந.எண்.க.89 202/5 / இ1**

**தீர்மான எண்**: 995

**தீர்மானம்**: அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் 04</u>:-

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் 2024 – 2025 ஆண்டு பொதுநிதியின் கீழ் ரூ 5..50 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்காணும் விபரப்படியான பணி மேற்கொள்ளுவதற்கு 09.01.2025-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| **வ. எண்** | **வேலையின் பெயர்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி கோரி தொகை GST வரிகள் உட்பட ( மதிப்பீட்டைவிட கூடுதல் / குறைவு )** |
|---|---|---|---|
| 1 | வார்டு எண். 18-ல் உள்ள D11 – D11 திட்டச் சாலையில் அமைந்துள்ள தெருவில் | திரு.S.மாணிக்கம், நகராட்சி ஒப்பந்ததாரர் ஆண்டிபட்டி | ரூ. 5,26,520.00<br>0.20 % குறைவு |

| | | | |
|---|---|---|---|
| | பழுதடைந்துள்ள சிறுபாலத்தினை சரிசெய்து அமைக்கும் பணி மேற்கொள்ளுதல் | திருமதி.எஸ்.சிட்டு, நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | ரூ. 5,29,250.00<br>0.30 % அதிகம் |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஒப்புநோக்கு பட்டியல் தயார் 2 செய்யப்பட்டதில் மதிப்பீட்டினை காட்டிலும் குறைந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய **திரு.S.மாணிக்கம்** என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அன்னார் மூலம் பணிகள் மேற்கொள்ளுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது -

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 4253 / 2024 / இ1**

**தீர்மான எண்**: 996

**தீர்மானம்:** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் 05:</u>-

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் **பாதாள சாக்கடை திட்டத்திற்காக கருவேல்நாயக்கன்பட்டியில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிப்பு செய்யப்பட்ட நீரை** ( Clear Water Tank ) **வெளியேற்றப்படுவதற்காக பொருத்தப்பட்ட** 60HP ( Non clog Motor ) **இரண்டு மோட்டார்களில்** ( 1 + 1 ) **ஒரு மோட்டார் பழுதுதடைந்துள்ளதை ரூ.**3.95/- **இலட்சம் மதிப்பீட்டில் சரி** செய்வதற்கான பணியினை மேற்கொள்ளுவதற்கு பதிவு செய்யப்பட்ட நகராட்சி ஒப்பந்ததாரர்களிடம் இருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று ஒப்பந்ததாரர்களிடம் இருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர்களின் பெயர்** | **விலைப்புள்ளி கோரிய மொத்த தொகை ( ரூபாயில் ) ( GST வரி உட்பட )** |
|---|---|---|
| 1 | திருமதி.எஸ்.சிட்டு, நகராட்சி ஒப்பந்தாரர், தேனி | 389636 |
| 2 | திரு.எம்.சக்தி, நகராட்சி ஒப்பந்ததரரர், தேனி | 408838 |
| 3 | திரு.டி.இரமேஷ், நகராட்சி ஒப்பந்ததாரர், தனி | 427797 |

மேற்காணும் பணியினை மேற்கொள்ளுவதற்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த 3 சிட்டு என்ற நகராட்சி ஒப்பந்ததாரர் மூலம் பணி.எஸ். பட்ச விலைப்புள்ளி கோரிய திரு மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கிய விபரம் மன்றத்தின் பார ்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

அ) பணியின் அவசர அவசியம் கருதி பதிவு செய்யப்பட்ட நகராட்சி ஒப்பந்ததாரரிடம் விலைப்புள்ளி பெற்று குறைந்த பட்ச விலைப்புள்ளி கோரிய திரு சிட்டு என்ற ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ள.எஸ்.

வேலை உத்தரவுவழங்கியதை மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண் : 2941 / 2024 / இ1**
**தீர்மான எண்**: 997
**தீர்மானம்**: அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் 06</u>:-**

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய வளாகப் பகுதியில் பிளாஸ்டிக் கழிவுகள் சேகரம் செய்வதற்காக கட்டப்பட்ட பொருட்கள் மீட்பு மையம் தீப்பற்றி எரிந்து சேதாரம் அடைந்து விட்டதால் அந்த மையத்தினை இடித்து அப்புறப்படுத்திட இந்நகர்மன்றத் தீர்மான எண் ,816 .நாள் ல் அனுமதி வழங்கியதின் பேரில் மேற்படி மையத்தினை அப்புறப்படுத்திட-29.07.2024 . -15.11.20224ம் தேதி ஏலம் கோரியதில் யாரும் ஏலம் கேட்க முன்வராததால் மறுஏலம் -09.01.2025ம் தேதி கோரியதில் கீழ்காணும் விபரப்படியான இரண்டு ஏலதாரர்கள் கலந்து கொண்டு ஏலம் கோரியுள்ளார் .

| வ. எண் | ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் விபரம் | ஏலக்கேள்விகள் |
|---|---|---|
| 1 | திரு.வீ.வெள்ளப்பாண்டி,<br>த/பெ எஸ்.வீரத்தேவர்,<br>திருமலாபுரம். | ரூ.24,100 /-, ரூ.24800 /-, மற்றும் 25500 /- |
| | திரு.மா.உலகநாதன்,<br>த/பெ மாயாண்டி,<br>அண்ணா நகர்,<br>மதுரை ரோடு, தேனி | ரூ.24200 /-, ரூ.25000 /- |

மேற்காணும் பணிக்கு கலந்து கொண்ட 2 ஏலதாரர்களில் அதிகபட்ச தொகையாக ரூ.25500/- என்று ஏலம் கோரிய திரு.வீ.வெள்ளப்பாண்டி, த/பெ எஸ்.வீரத்தேவர், என்பவரின் ஏலக்கேள்வியினை ஏற்று அன்னார் மூலம் மையத்தினை இடித்து அப்புறப்படுத்துவதற்கான பணியினை மேற்கொள்ளுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது-

**<u>அலுவலகக்குறிப்பு</u>:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 3709 / 2024 / இ1**
**தீர்மான எண்**: 998
**தீர்மானம்**: அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் 07</u>:-**

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் TNCRUDP 2023 – 2024ம் ஆண்டு திட்டத்தின் கீழ் நகர்பகுதியில் விடுபட்ட / விரிவாக்கப் பகுதியில் பாதாளச் சாக்கடை திட்டம் செயல்படுத்தும் பணியினை உலக வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை செயல்படுத்திட நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் Roc.No. 29916 / 2024 / WB, Dated : 22.11.2024-ன் வழிகாட்டுதலின்படி நகர அளவிலான செயல் திட்டக் குழு

( City Climate Action Plan Committee ) அமைத்து நடைமுறைப்படுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மேற்காணும் குழுவில் கீழ்கண்டுள்ள விபரப்படி 10 எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் கொண்ட குழுவாக அமைத்திடவும், இக்குழு நகர காலநிலை செயல் திட்ட குழுமத்தில் உள்ளடக்கவும், ஒவ்வொரு 6 மாதத்திற்கு ஒருமுறை கூடி காலநிலையை எதிர்க்கும் செயல்பாடுகளின் தேவை மற்றும் அவர்களின் நகரத்திற்கு நகர அளவிலான செயல் திட்டக் குழு ( City Climate Action Plan Committee ) தயாரிப்பதற்கான ஆலோசனைகளை வழங்குவது மற்றும் அதை செயல்படுத்துவது போன்றவற்றை விவாதிக்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தன்னார்வ தொண்டு நிறுவனர்கள் ( NGOs )**

1. திருமதி.வீ.மகேஸ்வரி, Help Foundation, ( பதிவு எண் : 23 / 2017 ), இலட்சுமிபுரம், தேனி.
2. திருமதி.ஆ.புவனேஸ்வரி, Help Foundation, ( பதிவு எண் : 23 / 2017 ), இலட்சுமிபுரம், தேனி.

**குடியிருப்பு நலச் சங்ககளின் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு உறுப்பினர்கள் ( Residential Welfare Associations )**

1. கர்னல் ஜான் பென்னிகுயிக் நகர் நலச்சங்கம் ( பதிவு எண். 27 / 2016 ), பங்களாமேடு, தேனி.
2. நியூ ஸ்ரீராம் நகர் குடியிருப்போர் நலச்சங்கம் ( பதிவு எண்.46 / 2009 ), லேக் ரோடு, தேனி.

**நகர்மன்ற உறுப்பினர்கள் ( Elected Body Members )**

1. திருமதி. பா.ரேணுப்பிரியா, நகர்மன்றத் தலைவர்
2. திரு.மா.செல்வம், நகர்மன்றத் துணைத்தலைவர்
3. திருமதி.சு.கோகிலா, நகர்மன்ற உறுப்பினர்

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அலுவலர்கள் ( ULB Officials )**

1. ஆணையாளர், தேனி – அல்லிநகரம் நகராட்சி
2. நகர்நல அலுவலர், தேனி – அல்லிநகரம் நகராட்சி
3. செயற்பொறியாளர், தேனி – அல்லிநகரம் நகராட்சி

மேற்கண்ட 10 உறுப்பினர்களைக் கொண்ட நகர அளவிலான செயல் திட்டக் குழு ( City Climate Action Plan Committee ) அமைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்** : 3761 / 2018 / இ1
**தீர்மான எண்**: 999
**தீர்மானம்**: அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 08:-**

தேனி அல்லிநகரம் நகராட்சி - 1 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் கோரியதின்படி பட்டாளம்மன் கோவில் தெருவில் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார், சின்டெக்ஸ் பொருத்தி, மேடை அமைக்கும் பணிக்கு தொகை ரூ.2.90இலட்ச -/த்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வ ழுங்கல் நிதி 2024-2025ல் இருந்து

மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் வ ழங்கல் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.எண்.க.81202/52இ /**

**தீர்மான எண்**: 1000
**தீர்மானம்**: அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 09:-**

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான பழனிசெட்பட்டி நீரேற்று நிலையத்தில் இருந்து குடிநீர் நகர் பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் உதவி கோட்டப்பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை துறை, கடிதம் ந.க.எண் 106/2024/உ நாள் : 16.12.2024 ம் தேதிய கடிதத்தில் நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் பிரதான குழாய் ( 300mm DI Pipe ) பழைய பேருந்து நிலையம் அருகில் இராஜவாய்க்கால் சிறு பாலம் அமைக்கும் பணிக்கு இடையூறாக இருப்பதால் அதனை மாற்றி அமைக்க கோரி தெரிவிக்கப்பட்டது. எனவே மேற்படி ( 300mm DI Pipe ) குடிநீர் பிரதான குழாயை தற்காலிகமாக அகற்றும் பணிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டதில் இப்பணிக்கான ஆகும் உத்தேச செலவினம் ரூ 27,000/- ஆகும் பொதுமக்களின் குடிநீர் அவசர . .அவசியம் கருதி இப்பணி உடனடியாக மேற்கொள்ளப்பட்டது

மேலும் இப்பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 பிரிவு 57(7) ன் கீழ் குடிநீர் நிதியில் இருந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண். 4245/ 2024/இ2**

**தீர்மான எண்**: 1001
**தீர்மானம்**: அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 10:-**

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு வாகனம் எண் TN60AE2008 ( Jet Rodding Vehicle ) ல் பொருத்தப்பட்டுள்ள 6 டயர்கள் முழுமையாக தேய்மானம் அடைந்து வாகனத்தை இயக்க இயலாத சூழ்நிலையில் உள்ளது. மேலும் மேற்படி வாகனத்தின் பயன்பாட்டின் முக்கியதுவத்தினை கருத்தில் கொண்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள சிவகேசா டயர்ஸ் ( MRF Tyres and Service Franchisee ) தேனி, நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணிமேற்கொள்ளவும் இப்பணிக்கு ஆகும் செலவினம் தொகை ரூ 1,14,200 -/ஐ நகராட்சி குடிநீர் வடிகால் நிதி 2024-2025ல் இருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**இப்பணி மேற்கொள்ள பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விவரம் கீழ்கண்டவாறு.**

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளிகோரிய தொகை |
|---|---|---|
| 1 | சிவகேசா டயர்ஸ், தேனி. | 1,14,200/- |
| 2 | ஹாஜ் டயர்ஸ், கம்பம். | 1,14,800/- |
| 3 | லட்சுமி டயர்ஸ்,கம்பம். | 1,15,300/- |

**அலுவலகக்குறிப்பு :-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.இப்பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த பட்ச விலைப்புள்ளி விலை விகிதம் கோரிய சிவகேசா டயர்ஸ், தேனி என்ற நிறுவனம் மூலம் பணியினை மேற்கொள்வதற்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 2914 / 2023 / இ2**
**தீர்மான எண்**: 1002
**தீர்மானம்**: அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 11:-**

தேனி – அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட தேனி - பெரியகுளம் சாலையில் அமைந்துள்ள நகராட்சி துவக்கப் பள்ளி கட்டிடத்தினை நகராட்சி நிர்வாகம் இயக்குநர் அவர்களின் கருத்துருவை ஏற்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( நநி5(1) ) துறை **அரசாணை (நிலை) எண் : 37 நாள் : 01.03.2022 ல்** கீழ்வருமாறு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

" நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலனை செய்து, தேனி மாவட்ட வளர்ச்சி மற்றும் மாணவர்களின் நலன் கருதி தேனி – அல்லிநகரம் பெரியகுளம் சாலையில் நகராட்சிக்கு சொந்தமான கல்வி உபயோக பயன்பாட்டில் உள்ள கட்டிடங்களை ஒன்றிய அரசு சார்ந்த கல்வி நிறுவனத்திற்கு ( கேந்திரிய வித்யாலயா பள்ளி ) தற்காலிகமாக கட்டமின்றி ( free of cost ) மூன்று ஆண்டுகளுக்கு சிறப்பினமாக கருதி வழக்கமான நடைமுறைகளை பின்பற்றி செயல்பட நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுமதி வழங்கி அர சு ஆணையிடுகிறது "

இதன்படி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 04.01.2025 அன்று தேனி மாவட்டத்தில் கேந்திரிய வித்யாலயா பள்ளி துவங்குதல் தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் கீழ்வருமாறு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

" தேனி அல்லிநகரம் பெரியகுளம் சாலையில் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி துவக்கப்பள்ளி கட்டிடங்களை அரசாணை (நிலை) எண் : 37 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5(1)) துறை நாள் : 01.03.2022 ன் படி கேந்திரிய வித்யாலயா பள்ளி தற்காலிகமாக செயல்படுத்துவதற்கு கட்டணமின்றி வழங்கிட நகராட்சி நிர்வாகத்தின் மூலம் தீர்மானம் நிறைவேற்றி பராமரிப்பு பணிகளை உடன் மேற்கொண்டு அறிக்கை சமர்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டது "

அதனடிப்படையில் சர்வே வார்டு - C, பிளாக் எண் – 16, நகரளவு எண் : 17 ல் அமைந்துள்ள நகராட்சி துவக்கப்பள்ளி கட்டிடத்தினை மூன்று ஆண்டுகள் கட்டணமின்றி தற்காலிகமாக மேற்படி கேந்திரிய வித்தியாலயா பள்ளி நிர்வாகத்திற்கு ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 34/2019/எப்1)

**தீர்மான எண்**: 1003

**தீர்மானம்**: அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒம்).பா.ரேணுப்பிரியா,
நகர்மன்றத்தலைவர்,
தேனி-அல்லிநகரம் நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர்,
தேனி-அல்லிநகரம் நகராட்சி.